**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 28.02.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் உயர் கல்வி வாய்ப்புகளை அறிய கண்டுணர் சுற்றுலா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், "நான் முதல்வன் திட்டத்தின்" கீழ் அரசாங்க பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கான வேளாண் உயர் கல்வி பயில இளங்கலை பட்டப்படிப்புகள் பற்றிய கண்டுணர் சுற்றுலா 27.02.2023 அன்று நடைபெற்றது. இதில் கோவை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசாங்க பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் 160 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் துவக்க உரையில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயமுத்தூர் முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி அவர்கள், பல்கலைக்கழகத்திலுள்ள இளங்கலை பாடப்பிரிவுகள், இணைப்புக் கல்லூரிகள் மற்றும் உறுப்புக்கல்லூரிகள் பற்றியும், வேளாண் கல்லூரியில் இளங்கலை பயில்வதற்கான தகுதிகள் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்தும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு துறைகளான பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்துறை, உயிரி தொழில்நுட்பவியல், பண்ணை இயந்திரங்கள், வேளாண் வணிக மேலாண்மை இயக்குநரகம், அறுவடை பின்சார் தொழில்நுட்பமையம், பூச்சியியல் துறை, நன்செய் பண்ணை மற்றும் தாவரவியல் பூங்கா ஆகிய துறைகளுக்கு மிகுந்த உற்சாகத்துடன் மாணவ, மாணவியர் சென்று வந்தனர்.

இந்நிகழ்ச்சியின்போது கல்லூரி பேராசிரியார்களான முனைவர் M.பிராகதீஸ்வரன், முனைவர் P.K.பத்மநாபன், முனைவர் P.G.கவிதா மற்றும் முனைவர் D.முருகானந்தி ஆகியோர் கலந்துகொண்டு வேளாண்கல்வி, ஆராய்ச்சி விரிவாக்கம் குறித்தும் மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை பற்றியும் தெரிவித்தனர். மேலும், மாணவ, மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் வேளாண் கல்வி குறித்த விளக்கங்களைக் கேட்டறிந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**